கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
அசல் வழக்கு எண். 23/2019

வா.சா.1- சுப்புராஜ்

குறுக்கு விசாரணை - நாள் 21/10/2021

வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 5ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.-

நான் இந்த வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். என் அப்பா பெயர் என்னவென்றால் கந்தசாமி. எனது அப்பா தாவா சொத்தை 22/4/1987ல் தாவா சொத்தை அடமானம் வைத்த விவரம் எனக்குத் தெரியுமா என்று சொன்னால் தெரியும். என் அப்பா யாருக்கு அடமானம் வைத்தார் என்றால் எனது மாமனார் கந்தசாமிக்கு அடமானம் வைத்தார். அந்த அடமானம் பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.1.000/-க்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பதிவு ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த ஆவணத்தில் பணத்தை கொடுத்து திருப்பி கொள்ள கால அவகாசம் சொல்லப்பட்டிருந்ததா என்றால் சொல்லப்பட்டிருந்தது. கால அவகாசத்தின்படி நாங்கள் சொத்தை மீட்டுக் கொள்ள தொகையை செலுத்தாததால் தாவா சொத்தைப் பொறுத்து நாங்கள் பாகப்பிரிவினை பத்திரத்தை பதிவு செய்ய சென்றபோது 5ம் பிரதிவாதி எங்களை தாவா சொத்தின் அடமானம் திருப்பப்படாததால் பத்திரம் பதிவு செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். 5ம் பிரதிவாதி அரசு ஊழியர் என்பதால் நான் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நடக்க முடியும் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் அடமானத்தை திருப்பினால் மட்டுமே பத்திரத்தை பதிவு செய்ய முடியும் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை.